**செய்தி வெளியீடு எண்:516** **நாள்: 08.08.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 7.8.2017 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மதுரை மாநகரில் 1 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மண்டல ஒருங்கிணைந்த இணை ஆணையர் மற்றும் மாவட்ட உதவி ஆணையர் அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 4 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இந்து சமய அறநிலையத் துறை கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

ஆன்மீகத்தின் அடித்தளமே தல வழிபாடாகும். அத்தலங்களின் அடித்தளம் திருக்கோயில் அமைப்பிலும், அதன் வழிப்பாட்டு முறைகளிலுமே உள்ளது. அதனால், அதன் மாட்சிமையைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு, திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்வது, அன்றாட பூஜைகள் தங்கு தடையின்றி நடப்பதை உறுதி செய்வது, ஆக்கிரமிப்பில் உள்ள திருக்கோயில்களின் சொத்துக்களை மீட்டு அவற்றின் வருவாயைப் பெருக்குவது, பக்தர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பது போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மதுரை மாநகர், எல்லீஸ் நகரில் 12,237 சதுர அடி கட்டட பரப்பளவில் தரை மற்றும் முதல் தளத்துடன் 1 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த இணை ஆணையர் மற்றும் மாவட்ட உதவி ஆணையர் அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

இப்புதிய ஒருங்கிணைந்த இணை ஆணையர் அலுவலகக் கட்டடத்தில், உதவி ஆணையர் அலுவலகம், செயற்பொறியாளர் அலுவலகம், மண்டல தணிக்கை அலுவலகம், இணை ஆணையர் அலுவலகம், துணை ஆணையர் (சரி பார்ப்பு) அலுவலகம், மாவட்ட வருவாய் அலுவலர் / தனி அலுவலர் (ஆலய நிலங்கள்) ஆகிய அலுவலகங்கள் செயல்படும்.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு ஆதி மாரியம்மன் திருக்கோயிலில் 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1000 பக்தர்கள் ஓய்வெடுக்க ஏதுவாக கட்டப்பட்டுள்ள பக்தர்கள் ஓய்வுக் கூடம் மற்றும் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் 50 பக்தர்கள் உணவருந்த ஏதுவாக 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உணவகம்;

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், கிருஷ்ணாபுரம், அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் நகர், அருள்மிகு சீனிவாசப் பெருமாள் திருக்கோயில், திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் 2 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உலோக திருமேனி பாதுகாப்பு மையங்கள்;

என மொத்தம் 6 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் சோ. இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் மா.வீர சண்முக மணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 8.8.2017**